முருகப்பெருமான் துணை

**மகான் சோமாசிமாற நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.10.2023**, திங்கட்கிழமை

1. சத்திய ஞான சபை படைத்து
சகலருக்கும் ஞானமருள
சித்திகள் பெற்று வந்த ஞானியே
சிவராஜ யோகியே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது துலைதிங்கள்
வரங்களென சஷ்டிதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 ம் நாள், 23.10.2023, திங்கட்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோமாசிமாற நாயனாரும்
அருளுவேன் உலகநலம் காண
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து அரங்கன் அவதாரத்தை
4. அவதாரத்தை வெற்றி கொள்ளும்படி
ஆக்கமுடன் துணைபுரிந்து வர
அவனியோர் அரங்கனை தேடி
ஆற்றல்மிகு பிரணவக்குடிலை
5. குடிலை அடைந்தால் போதும்
குருவாக அனைத்து ஞானிகளும்
தேடிவந்து உதவி செய்துமே
தேவைகள் வேண்டல்கள் யாவும்
6. யாவுமே நிறைவேறும்படி அருளி
உயர்வழி அரங்கன் வழியின்
அவசியமெனக் காட்டி துணைநிற்பர்
அலைந்தொழிந்து தீ வழிச்செல்லா

7. செல்லாது உண்மை நெறிபட வாழ
சிறப்பான அருளாசி தந்து
வல்லமை கூட்டிக் காப்பதுடன்
வாழும் காலமே தருமம் செய்வதன்

8. செய்வதன் அவசியம் வலியுறுத்தி
செப்பிடுவேன் தருமபலம் கூட்டி
அய்யமற அவரவர்வினையகல
அனைத்து ஞானிகளும் துணை புரிவர்

9. துணை கூட கலியுகமக்களுக்கு
தொட்டதெல்லாம் துலங்குமே
இணையிலா மகா சக்திகளாக
எல்லா வரமும் கொண்ட ஞானவான்களாக

10. ஆகவே அற்புதம் பல கிட்டி
ஆளுமையை அரச நடைமுறையை
வகைபட மக்கள் நலம் பேணும்
வழிமுறையாக மாற்றும் பலம்

11. பலம் கண்டு வருங்காலத்தில்
பண்பான சமூகம் படைத்து
வலம் வருவர் ஞான ஆட்சிதந்து
வழங்கிய அறிவுரை ஆசிமுற்றே

–சுபம்–